
விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 23 புதன் 08.09.2021 மலர் - 2, இதழ் - 155

# முஸ்லீம்கள் அச்சத்தில் வாழக்கூடாது

மகாராஷ்டிர மாநிலம், புனேவில் உள்ள ‘குளோபல் ஸ்ட்ரேட்டஜிஸ் ஃபௌண்டேஷன்’ என்ற அறக்கட்டளை, ‘தேசமே முதலில் தேசமே உயர்வானது’ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.


விஜயபாரதம்

அதில் கலந்துகொண்டு பேசிய ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத், ‘ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒரே வம்சாவளியைப் பகிர்ந்து கொள்கிறார்கள். எனவே, ஒவ்வொரு பாரத குடிமகனும் அடிப்படையில் ஒரு ஹிந்துதான். இஸ்லாம் என்பது பாரதத்தில் படையெடுப்பாளர்களால் வந்தது. இது வரலாறு.

நமது நாட்டில் முஸ்லிம்கள் பயப்பட ஒன்றுமில்லை. ஹிந்துக்கள் யாருடனும் பகை கொள்வதில்லை. பாரதம் உலகின் வல்லரசாக இருக்கும். ஆனால் அது ஆயுத பலத்தால் அல்ல, விஷ்வ குரு வடிவத்தில் இருக்கும். எங்களைப் பொறுத்தவரை, ஹிந்து என்ற சொல், நம் தாய்நாடு, மூதாதையர்கள், கலாச்சாரத்தால் நமக்கு வழங்கப்பட்ட வளமான பாரம்பரியத்தை சேர்ந்தது. எனவே, இச்சூழலில் ஒவ்வொரு பாரதத்தவரும் எங்களுக்கு ஹிந்துவே. விவேகமான முஸ்லீம் தலைவர்கள் தேவையற்ற பிரச்சினைகளை எதிர்க்க வேண்டும். அடிப்படைவாதிகளுக்கு எதிராக உறுதியாக நிற்க வேண்டும். இதை நாம் எவ்வளவு விரைவாகச் செய்கிறோமோ, அவ்வளவு குறைவான சேதத்தை நமது சமூகம் சந்திக்கும்.

தேசத்தை உடைக்க நினைப்பவர்கள்தான் 'நாங்கள் ஒன்றல்ல, நாங்கள் தனித்தவர்கள்' என்று சொல்கின்றனர். நாம் ஒருபோதும் அதற்கு இரையாகிவிடக் கூடாது. நாம் ஒரே நாட்டினர். நாம் ஒரே தேசமாக ஒற்றுமையாக இருப்போம். இதுதான் நாம். இதையே ஆர்எஸ்எஸ் நினைக்கிறது, இதை உங்களுக்கு தெரிவிக்கவே நான் இங்கு வந்துள்ளேன்’ என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், ஜெனரல் சையத் அதா ஹஸ்னைன் (ஓய்வு) காஷ்மீர் மத்திய பல்கலைக்கழகத் தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான் பேசுகையில், ‘ஒரு வளமான சமுதாயத்திற்கு பன்முகத்தன்மை அவசியம், பன்முகத்தன்மை பாதுகாக்கப்படும் சமூகங்கள் செழித்து வளர்ந்துள்ளது. சனாதன கலாச்சாரம் யாரையும் வித்தியாசமாக கருதுவதில்லை, ஏனெனில் இந்த கலாச்சாரத்தில், உயிர் உள்ளவற்றிலும் உயிரற்றதிலும் தெய்வீகமே உணரப்படுகிறது.’ என்றார். லெப்டினன்ட் ஜெனரல் ஹஸ்னைன், பாரத முஸ்லிம்களை குறிவைக்கும் பாகிஸ்தானை கடுமையாக சாடினார், பாகிஸ்தானின் முயற்சிகளை முறியடிக்குமாறு முஸ்லீம் அறிவுஜீவிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

# இந்து முன்னணியின் சத்ரு சம்ஹார ஹோமம்


விநாயகர் சதுர்த்தி விழா தடைகள் நீங்கி எழுச்சியோடு நடைபெற வேண்டி, நெல்லை மாநகர் மாவட்ட இந்து முன்னணி சார்பில், சுத்தமல்லி ஸ்ரீ ஜெய மாருதி ஞான தர்ம பீடத்தில் சத்ரு சம்ஹார ஹோமம் நடைபெற்றது. இதில், இந்து முன்னணி மாநில துணைத்தலைவர் ஜெயக்குமார், இணை அமைப்பாளர் பொன்னையா, மாநில செயலாளர் குற்றாலநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விஜயபாரதம்





# ஹிந்து பாரம்பரிய மாதம்




விஜயபாரதம்

அமெரிக்காவிலும் கனடாவிலும் வேகமாக வளர்ந்து வரும் புலம்பெயர்ந்த சமூகங்களில் ஒன்றாக ஹிந்துக்கள் உள்ளனர். புலம் பெயர்ந்த ஹிந்துக்களின் உறுதியான குடும்ப அமைப்பு, கலாச்சாரம், பாரம்பரியம், கல்வி, அன்பு, திறமை போன்றவைகளின் காரணமாக அவர்கள் வாழும் சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் முழுமையாக ஒருங்கிணைகிறார்கள். ஆனால், பலரும் 'ஹிந்து' என்பதை ஒரு மதம் என்ற அளவில் மட்டுமே குறுகி பார்க்கின்றனர். அந்த குறுகிய எண்ணத்தை போக்கும் வகையில், ஹிந்து மதத்தின் பிரம்மாண்டம், பாரம்பரியம், நாகரிகம், பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில், அமெரிக்காவில் உள்ள 'உலக ஹிந்து கவுன்சில்' அக்டோபர் மாதத்தை ஹிந்து பாரம்பரிய மாதமாக கொண்டாடப்போவதாக அறிவித்துள்ளது. இது கனடாவிலும் கொண்டாடப்படுகிறது. இந்த அற்புதமான கொண்டாட்டத்தில் 30க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஏற்கனவே கைகோர்த்திருக்கின்றன; மேலும் பலர் இணைந்து வருகின்றனர். இந்த கொண்டாட்டம் அமெரிக்கா, கனடாவின் பல்வேறு பகுதிகளில், கலாச்சார நிகழ்ச்சிகள், பேஷன் ஷோக்கள், இணையவழி கருத்தரங்குகள், மாநாடுகள், விழிப்புணர்வு பயணங்கள் என பல்வேறு வழிகளில் நடக்க உள்ளன. இந்த கொண்டாட்டங்களில் பெரும்பாலானவை கொரோனா சூழலால் மெய்நிகர் வழியில் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீரமணியின் ஆகாசப்புளுகு



விஜயபாரதம்

விடுதலை போராட்ட வீரரான செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரம் பிள்ளை, ஈ.வெ. ராமசாமி நாயக்கரை தனது குருவாக ஏற்றுக் கொண்டார் என்று வாய் கூசால் மிகப் பெரிய பொய்யை கூறியுள்ளார் திராவிட கழகத் தலைவர் வீரமணி. அடிப்படைகூட தெரியாமல் பேசும் கி. வீரமணியின் இக்கருத்து தற்போது சர்ச்சையாகியுள்ளது, நகைப்புக்கு இடமாகியுள்ளது. பாரத தேசத்திற்காக அளவிலா கொடுமைகள் அனுபவித்தவர் வ.உ.சி. மாடுகள் கூட இழுக்க முடியாத செக்கை இழுத்தது குறித்து கேட்டபோது, 'செக்கையா இழுத்தேன். பாரதமாதாவின் தேரை அல்லவா இழுத்தேன்' என கூறியவர் வ.உ.சி. ஆனால், பாரதத்திற்கு சுதந்திரம் தரக்கூடாது என்று கூறியவர், வெள்ளையார்கள் பாரதத்தை விட்டு போக கூடாது என்று வலியுறுத்தியவர் ஈ.வெ.ரா. வ உ சி 1936களிலேயே மறைந்துவிட்டார். ஆனால், ஈ.வே.ரா நீதிக்கட்சி தலைவர் ஆனதே 1939ல் தான். அப்படி இருக்க ஈ.வேராவை எப்படி வ.உ.சி குருவாக ஏற்று கொண்டு இருக்க முடியும், ஈ.வே.ராவை பெருமைப் படுத்துவதாக நினைத்துக்கொண்டு வ.உ.சி'யை சிறுமைப் படுத்துகிறாரா வீரமணி? என மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# என்.ஐ.ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல்

வங்க தேசத்தை சேர்ந்த, ரபிக், சோபுஜ் ஷேக், ரஃபிக்துல் இஸ்லாம் உள்ளிட்ட 8 பேர் சட்ட விரோதமாக பாரதம் வந்து, போலியாக ஆதார் அட்டை, பான் கார்டு உள்ளிட்ட ஆவணங்களை பெற்று பெங்களூருவில் தங்கியிருந்தனர். இவர்கள் அங்கு மனிதக் கடத்தல், பெண்களை சித்ரவதை செய்தல், பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல், போலி ஆவணங்களை தயாரித்தல் உள்ளிட்ட குற்றங்களை செய்து வந்தனர். இதனை கண்டுபிடித்த தேசிய புலனாய்வு நிறுவனம், இது சம்பந்தமாக 13 பேரை கைது கடந்த ஜூன் மாதம் செய்தது. விசாரணை முடிவுற்ற நிலையில், தற்போது அவர்கள் மீது பல்வேறு குற்றப் பிரிவுகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# மோடி தலைமையில் பிரிக்ஸ் மாநாடு



விஜயபாரதம்

2021ம் ஆண்டிற்கான பிரிக்ஸ் உச்சி மாநாட்டை அதன் தலைவராக தற்போது உள்ள பாரதம் தலைமையேற்று நடத்துகிறது. பிரதமர் நரேந்திர மோடி, நாளை (செப்டம்பர் 9, 2021) 13வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டை இணைய வழியில், மெய்நிகர் மாநாடாக வழிநடத்துகிறார். இதில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். இக்கூட்டத்தில் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ, தென்னாப்பிரிக்கா அதிபர் சிரில் ரமபோசா ஆகியோரும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர். இந்த ஆண்டு பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் கருப்பொருளாக 'பிரிக்ஸ்@15: தொடர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமித்த கருத்துக்கான பிரிக்ஸ் ஒத்துழைப்பு' என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது முறையாக பிரிக்ஸ் மாநாட்டிற்கு பிரதமர் மோடி தலைமை வகிக்கிறார். முன்னதாக அவர் 2016ல் கோவாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். ஆப்கன் விவகாரம் இம்மாநாட்டில் முக்கிய இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வாரணாசி - சுனார் கப்பல் சுற்றுலா

உத்தர பிரதேசத்தில் உள்ள ஹிந்துக்களின் புனிதத் தலமான வாரணாசியில் சுற்றுலா வசதிகளில் புதிய பரிமாணங்களைக் கொண்டு வரும் நோக்கில் அம்மாநில அரசு, வாரணாசியில் இருந்து கிளம்பி மிர்சாபூர் சுனார் கோட்டைக்கு கங்கை ஆற்றில் கப்பலில் சென்று திரும்பும் விதத்தில் புதிய ரோ ரோ கப்பல் சேவையை துவங்கியுள்ளது. இதற்காக இரண்டு ரோ ரோ கப்பல்கள் பி.பி.இ திட்டத்தின் கீழ் குத்தகையாக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை இதில் வாரணாசியின் ரவிதாஸ் காட் முதல் சுனார் வரை பல்வேறு பாரத கலாச்சாரத் தளங்களைக் காணலாம். நேரடி இசை நிகழ்ச்சிகள், காலை, மதிய உணவு, மாலை சிற்றுண்டி, சுனார் கோட்டை, சுல்தான்கேஸ்வர் மகாதேவ் டிக்கெட்டுகள், வழிகாட்டி என அனைத்தும் இணைந்து ஒரு நபருக்கு ரூ. 3,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகள், குழந்தைகளுக்கு இலவசம், மொத்தமாக டிக்கெட் வாங்குபவர்களுக்கு சலுகைகள் என பல்வேறு கவர்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

விஜயபாரதம்



# வேகமான உள்கட்டமைப்பு வளர்ச்சி



விஜயபாரதம்

சாலை போக்குவரத்து அமைச்சகம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI), தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (NHIDCL) மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுடனான சந்திப்பில் பேசிய மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, 'உலகளாவிய ரீதியில் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாகி வருகின்றன. அவை முன்னெப்போதையும் விட வேகமாக, பாதுகாப்பாக நிலையானதாக உருவாக்கப்பட்டு வருகின்றன என்றார். மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த சாலைகளை அமைத்தல், புதிய தொழில்நுட்பத்தில் சாலை வடிவமைப்பு, கட்டுமானங்கள் மேற்கொள்வதன் அவசியத்தையும் குறித்து வலியுறுத்தினார். 'அம்பாலா கோட்புட்லி ஆறு வழிச்சாலை கிரீன்ஃபீல்ட் சாலைப் பணிகள் சாதனை வேகத்தில் கட்டப்பட்டு வருகிறது. 11,000 கோடி முதலீட்டில், 313 கிமீ நீளமுள்ள நெடுஞ்சாலை பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தானின் சாலை உள்கட்டமைப்பை மாற்றும்' என கூறினார்.

# ஹிந்து என நாடகமாடிய பாதிரி




விஜயபாரதம்

ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிஷப் கட்டேரா சுரேஷ்குமார், கிறிஸ்தவ பாதிரியாக இருந்தாலும் எஸ்.சி இடஒதுக்கீடு சலுகைகளைப் பெறுவதற்காக ஹிந்து எஸ்.சி சான்றிதழ் வைத்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இவர் நடத்தும் ஹார்வெஸ்ட் இந்தியா என்ற பெரிய சுவிசேஷ அமைப்பு, ஒரு பெரிய தேவாலயம், 10 பைபிள் கல்லூரிகளை நடத்துகிறது. இந்த குற்றச்சாட்டை விசாரித்த குண்டூர் மாவட்ட ஆட்சியரும் கட்டேரா சுரேஷ்குமார் ஒரு ஹிந்துதான் என அறிவித்தார். இதனையடுத்து சட்ட உரிமைகள் பாதுகாப்பு மன்றம், மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு இது குறித்து புகார் அளித்தது. எஸ்.சி எஸ் டி உரிமை மன்றமும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி தேசிய எஸ்சி கமிஷனில் புகார் அளித்துள்ளது. இவ்விவகாரத்தை தற்போது தேசிய எஸ்சி கமிஷன் விசாரித்து வருகிறது. இவர் மீது ஏற்கனவே பல்வேறு முறைகேடு புகார்கள் உள்ளன. ஏற்கனவே, வெளிநாட்டு நிதி முறைகேட்டு புகாரினால் ஹார்வெஸ்ட் இந்தியாவின் எப்.சி.ஆர்.ஏ லைசன்ஸ் முடக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பியோலா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மிஷனரி மாநாட்டில் கட்டேரா சுரேஷ்குமார், பாரதம் குறித்து கூறிய பல பொய்யான தகவல்கள், தேச விரோத, ஹிந்து விரோத கருத்துகளை பேசியுள்ளார். பாரதப் பிரதமரை தரக்குறைவாக விமர்சித்துள்ளார்.

# ஏற்றுமதியை அதிகரிக்கும் உ.பி



விஜயபாரதம்

மனித நாகரீக வளர்ச்சிக்கு நீர்நிலைகள்எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு ஏற்றுமதி வளர்ச்சிக்கு கடற்கரைகள் அவசியம். ஆனால், நமது பாரதத்தில் கடற்பகுதிகள் இல்லாத மாநிலங்களில் ஒன்றான உத்தர பிரதேச மாநிலம், கடந்த 2021 ஏப்ரல், மே மாதங்களில் சரக்கு ஏற்றுமதியை ரூ. 21,500 கோடிக்கு செய்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட 150 சதவிகிதத்திற்கும் அதிகம். இம்மாநிலத்தின் முக்கிய ஏற்றுமதி பொருட்களாக தோல், ஜவுளி, கண்ணாடி பொருட்கள் உள்ளன. உத்தரபிரதேசத்தின் தயாரிப்புகளுக்கு உலகம் முழுவதிலுமிருந்து வரும் வரவேற்பால், யோகி ஆதித்யநாத் தலைமையிலான அம்மாநில அரசு 75 மாவட்டங்களிலும் வெளிநாட்டு வர்த்தக ஊக்குவிப்பு, வசதி மையங்களை அமைக்கவும், பல்வேறு எம்.எஸ்.எம்.இ துறைகளிடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் முடிவு செய்துள்ளது. தரவுகளின்படி, குஜராத், மகாராஷ்டிரா, தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவுக்குப் பிறகு நாட்டின் ஆறாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக உத்தரபிரதேசம் உள்ளது.

# இலங்கையில் பாகிஸ்தான் போதைப் பொருள்



விஜயபாரதம்

இலங்கை கடற்படையினர் மாலே கடற்பகுதியில் ரோந்தின்போது, பாகிஸ்தானை சேர்ந்த ஒரு படகில் இருந்து 336 கிலோ ஹெராயின் வகை போதைப்பொருட்களை கைப்பற்றினர். அப்படகில் இருந்த ஏழு பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டனர். இதன் சர்வதேச மதிப்பு ரூ. 3.1 பில்லியன். விசாரணையில் இந்த போதைப்பொருட்கள் கொழும்புவுக்க கடத்தப்படவிருந்தது தெரியவந்தது. இதேபோல, கடந்த ஆண்டு டிசம்பரில், பாகிஸ்தானின் குவாடர் துறைமுகத்திலிருந்து கிளம்பி வந்த ஒரு கப்பலில் இருந்து 2.5 கோடி ரூபாய் மதிப்புள்ள போதை மருந்துகளை இலங்கை அதிகாரிகள் கைப்பற்றினர். 4 பகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டனர். பாகிஸ்தானின் இந்த துறைமுகத்தை சீனா கட்டுப்படுத்தி வருகிறது. போதைப்பொருள், ஆயுதங்களை கடத்துவதற்காக கப்பல்கள் சர்வதேச சட்டங்களை மீறி சர்வதேச கடற்பரப்பில் நிலைநிறுத்தப்படுவதாக இலங்கையில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதேபோல லட்சத்தீவு பகுதிகளிலும் நடப்பதாக நமது உளவுத்துறையும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# சான்பிரான்சிஸ்கோ விசித்திர திட்டம்



விஜயபாரதம்

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அதிகரித்து வரும் சூழலில், அதனை தடுக்கும் விதமாக சான்பிரான்ஸிஸ்கோ நகர நிர்வாகம் ஒரு விசித்திரமான திட்டத்தை அறிவித்துள்ளது. அதன்படி, துப்பாக்கி சூடு சம்பவங்களில் ஈடுபடும் அல்லது ஈடுபட வாய்ப்புள்ள பழைய குற்றவாளிகளுக்கு, அவர்கள் துப்பாக்கி சூட்டில் ஈடுபடாமல் இருக்க மாதம்தோறும் 300 டாலர்கள் உதவித்தொகை அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளது. இதை அங்கு சர்ச்சையை கிளப்பியுள்ளது. இதில் பாதிக்கப்பட்டவரின் தாய் ஒருவர், “நீங்கள் அவர்களின் துப்பாக்கிகளை எடுக்கவில்லை. அவர்கள் அதிக துப்பாக்கிகளை வாங்குவதற்கு பணம் கொடுக்கிறீர்கள்” என கூறினார். ‘இது பயங்கரமான யோசனை’, ‘இனி அவர்களுக்கு மாதம்தோறும் கிறிஸ்துமஸ்தான்’ என பல்வேறு கண்டனங்களும் எழுந்துள்ளன.

# ஹிந்துக்களும் ஹிஜாப் அணிய வற்புறுத்தல்


மகாராஷ்டிர மாநிலம், நாக்பூரில் முதல்வர் வீட்டிற்கு அருகில் ‘இளம் பெண்கள் இஸ்லாமிக் அமைப்பை’ சர்ந்த சில முஸ்லிம் பெண்கள் ‘அனைத்து ஹிந்துக்களும் ஹிஜாப் அணியலாம்’ என்ற துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர். அங்குள்ள ஹிந்து பெண்களையும் சிறுமிகளையும் ஹிஜாப் அணிய வற்புறுத்தினர். விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில், சம்பவம் நடந்த செப்டம்பர் 4ம் தேதி 'ஹிஜாப் தினம்' என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால், உண்மையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 1 தான் உலக ஹிஜாப் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது குறித்து அப்பகுதி மக்கள் காவல் துறையில் புகார் அளித்தனர். இதனையடுத்து அப்பெண்கள் ஓட்டம் பிடித்தனர். இந்த பெண்களின் அமைப்பு ஜமாத் இ இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் பெண்கள் பிரிவு. 1948ல் உருவாக்கப்பட்ட ஜமாத் இ இஸ்லாமி ஹிந்த் இரண்டு முறை பாரத அரசால் தடை செய்யப்பட்டது. இது கஷ்மீரை பிரிப்பதை, முஸ்லிம் அரசு அமைப்பதை அடிப்படையாக கொண்டு செயல்படும் ஒரு தீவிர அமைப்பு. ஜமாத் இ இஸ்லாமி ஹிந்தின் மாணவர் பிரிவான இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் (சிமி) என்பது தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்






# சுவாமி சிவானந்தர்



விஜயபாரதம்

சுவாமி சிவானந்தர் ரிஷிகேஷில் வாழ்ந்த ஒரு ஹிந்து சமய வேதாந்த குரு. அவர் 1887 செப்டம்பர் 8ல் திருநெல்வேலி, பத்தமடையில் பிறந்தார். அப்பைய தீட்சிதர் வம்சத்தில் பிறந்த இவரின் இயற்பெயர் குப்புசாமி. சிறு வயதிலேயே கல்வி, கலை, விளையாட்டு என சிறந்து விளங்கினார். மருத்துவம் படித்து மலேசியாவில் மருத்துவராகப் பணிபுரிந்தார். ஏழை எளியவர்களுக்கு இலவச சிகிச்சைகள் செய்தார். பணிகளுக்கு இடையே சத்சங்கம், பஜனைகளில் ஈடுபட்டார்.

மலேஷியாவில் ஒரு நாள், ரப்பர் தோட்டத் தொழிளாளியான ஏழை பட்டியலினப் பெண் ஒருத்தி பிரசவ வேதனையால் துடித்தாள். உதவி செய்ய யாரும் இல்லை. செய்தி அறிந்த மருத்துவர் குப்புசாமி, உடனே அந்த பெண்ணின் குடிசைக்கு சென்று பணிவிடைகளைச் செய்தார். ஒரு பெண்ணின் உதவியுடன் பிரசவம் பார்த்தார். இரவு அங்கேயே தங்கி, தாயும் சேயும் நலமாக இருப்பதை உறுதி செய்த பிறகே குடிலுக்குத் திரும்பினார். தீண்டாமை தீவிரமாக இருந்த காலத்தில், பாரம்பரியமான ஓர் அந்தணக் குடும்பத்தில் பிறந்து, ஏழைப் பெண்ணுக்குத் தாயுமானவராக இருந்து உதவியவர் குப்புசாமி.

சில ஆண்டுகளில் ஆன்மீக நாட்டம் மேலோங்க, மருத்துவப் பணியைத் துறந்து பாரதம் திரும்பி கடுமையான தவத்தில் ஈடுபட்டார். ரிஷிகேஷில் தெய்வ நெறிக் கழகம் என்ற ஆசிரமம் தொடங்கினார். சுவாமி விஸ்வானந்த சரஸ்வனாதியை குருவாக ஏற்று, அவரிடம், `சுவாமி சிவானந்த சரஸ்வதி' என்ற பெயரில் சந்நியாச தீட்சை பெற்றார். தவத்திலும் தியானத்திலும் ஈடுபட்டார்.

அப்துல் கலாமின் சிறு வயது கனவு விமானியாக வேண்டும் என்பது. ஆனால், விமானப் படையின் பைலட் தேர்வில் தோற்றதால் விரக்தி அடைந்தார். வாழ்நாள் கனவு சிதைந்து போனதை ரிஷிகேஷம் சென்று சுவாமி சிவானந்தரிடம் கூறினார். "நீ படைக்கப்பட்டது விமான ஓட்டியாவதற்கு அல்ல. வேறு எதற்காகவோ நீ படைக்கப்பட்டிருக்கிறாய். அதை நோக்கிச் செல்" என்று அறிவுரை கூறினார் சிவானந்தர். `அந்தத் தருணம்தான் என் வாழ்வில் மிகவும் முக்கியமான தருணம்' என்று கலாம் அடிக்கடி குறிப்பிடுவார். பாரதத்தின் முன்னால் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம். உள்ளிட்ட வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த பலருக்கும் வாழ்வில் ஆன்மிக ஒளி ஏற்றியவர் சுவாமி சிவானந்தர்.

சுவாமி சிவானந்தர் போற்றிய ஆன்ம நேயத்தை நாமும் போற்றி, தொண்டு செய்வோம்...

# விநாயகர் சதுர்த்திக்கு தடை
# வீடுகளிலிருந்து கிளம்பியது எதிர்ப்பு அலை



























விநாயகருக்கு தடையா


விநாயகருக்கே தடையா?


விநாயகர சதுர்த்திக் தடையா


விநாயக சதுர்த்திக்கு தடையா?